"In pursuance of Article 205 read with clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly the demands for further grants for the year 1993-94."

10. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 29 ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. 1993-94 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதமும், மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பும். மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993-94 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் 1-30 மணி அளவிலே முடிய வேண்டும் என்று விதி 29 இருந்தாலும், அதைத் தளர்த்தி, 2 மணி வரையிலும் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம்.'' எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒரு மனதாகநிறைவேறியது மாண்புமிகு நிதி அமைச்சர்

11. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1993-94 மீது பொது விவாதமும் மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பும்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,